கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 11ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.86/2022
* * * *

1. ஜெகநாதன்
2. பாண்டிச்செல்வி
3. இராமகிருஷ்ணன்
4. ராஜேந்திரன்
5. சசிக்குமார்
6. பூங்கோதை ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/ எதிரிடை /

பாண்டியன் ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக இம்மனுவானது இன்று 11.02.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.O.சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இந்நிர்

இடைநிலை மனுவில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது கட்டளை 8 விதி 9ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையை அனுமதித்து வழக்கு கோப்பில் சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்**

1.1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது மனுவில், ஏற்கனவே இந்நிர் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனினும், சில முக்கிய ஆவணங்கள் பற்றியும், மேலும் வழக்குச்சொத்து சம்பந்தமான சில உண்மைகளை எதிர்வழக்குரையில் குறிப்பிடவேண்டியுள்ளதால் அசல் வழக்கினை பொறுத்து கூடுதல் எதிர்வழக்குரை அவசியமானதாக உள்ளது என்றும், எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு இம்மனுவினை அனுமதித்து

மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை கோப்பிற்கு எடுத்து அசல் வழக்கு கோப்பில் சேர்க்கவேண்டி இந்த இடைநிலை மனுவானது தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்கள்.

2.1) எதிர்மனுதாரரர்கள்/வாதிகள் தரப்பு எதிருரையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவினை அனுமதிக்ககூடாது என்றும், மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், இந்நிர் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் கடந்த 09.11.2022ம் தேதியன்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்து அசல் வழக்கில் கடந்த 25.02.2025ம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, அசல் வழக்கானது 28.04.2025ம் தேதியன்று வழக்கு விசாரணைக்காக ஏற்பட்டுள்ளதாகவும், இந்நிலையில், மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 09.11.2022ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்த நிலையில் 3 வருட காலதாமதமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**<u>3) தீர்வு</u>:-**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

3.1) அசல் வழக்கானது, தாவாச்சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரமும் அதன் தொடர்ச்சியாக தாவாச்சொத்துக்களை வாதியின் வசம் ஒப்படைக்ககோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

3.2) இந்நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையை கோப்பிற்கு எடுப்பது குறித்து பரிசீலிக்கையில், தாவா வழக்குச்சொத்து சம்பந்தமான முக்கியமான ஆவணங்கள் கிடைத்துள்ளதாகவும், மேலும் முக்கியமான சில காரணங்களை எதிர்வழக்குரையில் சேர்க்கவேண்டியுள்ளதாலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்வது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டு பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

இம்மனுவானது சட்டப்படியானது என்று தீர்மானிக்கப்பட்டும், மேற்படி இம்மனுவினை அனுமதிப்பதினால் அசல் வழக்கின் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, இம்மனுவினை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்வித சாதக பாதகமும் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுவானது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

3.3) எனினும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய 3 ஆண்டுகாலம் காலதாமதம் ஏற்படுத்தியுள்ளதாக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் குறிப்பிட்டுள்ள வாதத்தை கருத்தில்கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இந்நிர் இடைநிலை மனுவினை கீழ்க்கண்ட நிபந்தனையின் கீழ் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இந்நிர் இடைநிலை மனுவானது அனுமதிக்கப்படுகிறது. எனினும், மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/−ஐ

எதிர்மனுதாரர்/வாதிக்கு இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 11.02.2026ம் தேதியன்று இந்த திறந்த நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.11 18:11:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:-</u>**

**<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.11 18:12:06 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.86/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 11.02.2026.